தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 19.01.2024

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் எள்ளுக்கான விலை முன்னறிவிப்பு – எள் விலை இலாபகரமாக இருக்கும்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில், வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும் தமிழ்நாடு பாசன விவசாய மேம்பாட்டுத் திட்டத்தின் விலை முன்னறிவுப்பு திட்டமானது, எள்ளுக்கான விலை முன்னறிவிப்பை வெளியிட்டுள்ளது.

உலகில் சூடானுக்கு அடுத்தபடியாக எள் உற்பத்தியில் இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளது. எள் ஏற்றுமதியில் இந்தியா முதலிடம் வகிக்கிறது மற்றும் அமெரிக்கா , வியட்நாம் மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறது. இந்தியாவில் குறுவை மற்றும் ரபி பருவத்தில் எள் பயிரிடப்படுகிறது. பயிர் முன்னறிவிப்பு ஒருங்கிணைப்பு மையத்தின் (CFCC) மதிப்பீட்டின்படி, 2022-23ஆம் ஆண்டில் காரீஃப் பருவத்தில் 13.44 இலட்சம் எக்டராக இருந்த பயிர் பரப்பு 2023-24 இல் 12.43 இலட்சம் எக்டராகவும், ரபீ பருவத்தில் 2022-23 இல் 0.27 இலட்சம் எக்டரில் இருந்து 0.16 இலட்சம் எக்டராகவும் 2023-24 இல் குறைந்து வருகிறது. மேற்கு வங்காளம் , குஜராத், மத்தியப் பிரதேசம் , ராஜஸ்தான், உத்திர பிரதேசம் மற்றும் தமிழ்நாடு ஆகிய முக்கிய மாநிலங்களில் எள் பயிரிடப்படுகின்றன.

தமிழகத்தில், 2021-22 இல், 4.7 இலட்சம் எக்டர் பரப்பளவில் , எள் உற்பத்தி , 2.79 இலட்சம் டன்னாக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது . தமிழகத்தில் எள் உற்பத்தித்திறன் எக்டருக்கு 589 கிலோ ஆகும். விழுப்புரம் , தஞ்சாவூர், ஈரோடு, கரூர், கடலூர், சேலம், திருவண்ணாமலை மற்றும் திருவள்ளூர் ஆகிய முக்கிய மாவட்டங்கள் மாநிலத்தின் எள் பரப்பளவில் 66 சதவீதமும், உற்பத்தியில் 65 சதவீதமும் பங்களிக்கின்றன.

தமிழகத்தில் ஏப்ரல் முதல் மே வரையிலும் , டிசம்பர் முதல் ஜனவரி வரையிலும் எள் விதைக்கப்படுகிறது. மானாவாரியாக கோடை பயிராக குறைந்த பரப்பளவில் எள் பயிரிடப்படுகிறது. அதிக வறட்சியைத் தாங்கும் தன்மை மற்றும் விதைகளில் உள்ள அதிக எண்ணெய் உள்ளடக்கம் ஆகியவற்றால் எள்பரவலாக விரும்பப்படுகிறது. சிவப்பு நிறத்தில் இருந்து பழுப்பு நிறத்தில் இருக்கும் வேறு சில இரகங்களும் பயிரிட படுகின்றது . ரபி பயிர் சாகுபடி பரப்பு குறைக்கப்பட்டது , அதிக பருவ மழைப்பொழிவு காரணமாக வரத்து பற்றாக்குறை மற்றும் பயிர் தேவை அதிகரிப்பு ஆகியவை வரும் மாதங்களில் எள்ளின் விலை அதிகரிக்க வாய்ப்புள்ளது.

விலை முன்னறிவிப்புத் திட்ட குழு, கடந்த 15 ஆண்டுகளாக சிவகிரி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் நிலவிய எள் விலை மற்றும் சந்தை ஆய்வுகளை மேற்கொண்டது. ஆய்வு முடிவுகளின் அடிப்படையில், அறுவடையின் போது (ஏப்ரல்'24) தரமான எள்ளின்பண்ணை விலை கிலோவிற்கு ரூ.170 முதல் 175 வரை இருக்கும் எனக் கணிக்கப்பட்டுள்ளது. எனவே, விவசாயிகள் மேற்கூறிய சந்தை ஆலோசனை அடிப்படையில் விதைப்புக்கான முடிவுகளை எடுக்குமாறு பரிந்துரைக்கப்படுகின்றனர். பருவமழை மற்றும் பிற மாநிலங்களில் இருந்து வரும் வரத்தின் அடிப்படையில் விலையில் மாற்றம் இருக்கலாம்.

**மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்**


1. உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்
   வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்
   தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம்
   கோயம்புத்தூர் 641003
   தொலைபேசி : 0422-2431405
2. இயக்குனர் மற்றும் ஒருங்கிணைப்பு அதிகாரி
   நீர் மற்றும் புவியியல் ஆய்வு மையம்
   தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம்
   கோயம்புத்தூர் 641003
   தொலைபேசி : 0422-6611278


**தொழில்நுட்பவிவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்**


பேராசிரியர் மற்றும் தலைவர்
எண்ணெய் வித்துக்கள் துறை
தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் 641003
தொலைபேசி :0422-2450812


***மக்கள் தொடர்பு அலுவலர்***